Koviloor Digital Library

ஓம்

கருத இனிக்கும் கற்பகம்



Acc No 38419

அன்பளிப்பு :

அருள்நெறித் திருக்கூட்டம்,

கண்டவராயன்பட்டி.

1984

Koviloor Digital Library

Koviloor Digital Library

3/2
38419

கருத இனிக்கும் கற்பகம்

ஆசிரியர்கள்

சிவ ஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி

வயி. நாக. ராம. வே. இராமநுதன் செட்டியார்

பேராசிரியர்

அருட்கவி கு. செ. இராமசாமி, M. A.

கவிஞர் சுப. நா. நாகப்பன்

வித்துவான் நா. மீனவன், M. A.

வெளியிட்டவர் :

நா. அருணாசலன்

அன்பளிப்பு :

அருள்நெறித் திருக்கூட்டம்,

கண்டவராயன்பட்டி.

Koviloor Digital Library

ஓம்

என் கடன் பணி செய்து கிடப்பதே.

முன்னுரையாக சில வார்த்தைகள்

அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளனாகிய அடியேன் ஆண்டுதோறும் ஆவணி மகா சதுர்த்தி விழாவன்று வழிபாடு செய்ய வரும் பக்தர்களுக்கு திருக்கூட்டத்தின் சார்பாக, விநாயகப்பெருமான் சிறப்பை பாடல்களாக அச்சிட்டு, பக்தர்களுக்கு இலவசமாக வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

இவ்வாண்டு பாலவிநாயகர், கற்பகவிநாயகர், வல்லப விநாயகர், மகாவிநாயகர், செல்வவிநாயகர், சித்திவிநாயகர். நர்த்தனவிநாயகர், சம்பிரதவிநாயகர் எனப் பெருமையோடு பேசப்பெறும் ஒன்பது வடிவத்தையும் மேற்கொண்டு கவிஞர் **திரு நாகப்பன் அவர்கள்** இயற்றிய சிறப்புப் பாக்களையும். எனது பெருமதிப்பிற்குரியவரும், மகா சந்நிதானங்கள் போற்றிப் புகழ்ந்துவரும் பேரறிஞரும், புலவர் பெருமக்களால் பாராட்டி வணங்கப் பெறுபவருமான சிவ ஸ்ரீ தத்தபுருஷ தேசிகர் பாலகவி **வயி நாக. ராம வே. இராமநாதன் செட்டியார்** அவர்கள் இயற்றித் தந்த தமிழ் அர்ச்சனையான 108 போற்றித் திருபஃறொடையையும் பேராசிரியர் அருட்கவி **திரு. கு. செ. இராமசாமி**, எம். ஏ., **அவர்கள்** இயற்றிய விருத்தங்களையும் கவிஞர் **நா மீனவன், M. A., அவர்கள்** எழுதிய ''கொற்றவா வணங்குகிறோம்'' என்ற பாடல்களையும் திரட்டி **''கருத இனிக்கும் கற்பகம்''** என்று பெயர் சூட்டி புத்தகமாக வெளியிட்டு அருள்மிகு கற்பகப் பெருமான் திருவடியில் வைத்து வணங்கி பக்தர்களுக்கு வழங்கும்போது இன்புறுகிறேன்.

பிள்ளையார்பட்டி,
ரக்தாட்சி, ஆவணி 14.

நா. அருணாசலன்,
கண்டவராயன்பட்டி.

Koviloor Digital Library

ஓம்
கணபதியே நம.

கருத இனிக்கும் கற்பகம்

விநாயக வணக்கம்

ஒற்றைக் கொம்பும், இரு செவியும்,
ஓங்கா ரம்போல் வலஞ்சுழியும்
மற்றைக் கைகள் இரண்டோடும்
வருவாய் ஐயா வருவாயே!
உற்ற துணையாய் எப்போதும்
உவந்து கருணை புரிவாயே!
வெற்றிப் **பிள்ளையார்பட்டி**
விளங்கும் ஞான விநாயகனே! 1

Koviloor Digital Library

ஆல மரமும், அரசடியும்,
ஆறும், குளமும் நீயிருப்பாய்!
கோல மிகுந்த கோபுரத்தும்,
குடிசை யிலும் நீ போயிருப்பாய்!
பாலன் எனது நெஞ்சினிலும்
பார்வை வைப்பாய்! பதம் வைப்பாய்!
சீலப் பிள்ளை யார் பட்டி
திகழும் ஞான விநாயகனே! 2

எல்லாம் அறியும் அறிவாளா,
எனது குறையும் அறிந்திலையோ?
நல்லார் எவர்க்கும் அநுகூலா,
நானும் உனது மகன் இலையோ?
பல்லாண்டாக ஏங்குகிறேன் –
பரிவு காட்ட வேண்டுகிறேன்!
செல்வா, பிள்ளையார் பட்டி
சேரும் ஞான விநாயகனே! 3

மாடு தருவாய், மனை தருவாய்;
மக்கள், சுற்றம், சுகம் தருவாய்,
பாடும் உயர்ந்த பேறுகளாம்
பதினாறையுமே நீ தருவாய்!
வாடும் பயிர்க்கு மழை போல
வருவாய்; என்னை வாழ்விப்பாய்!
நாடும் பிள்ளை யார்பட்டி
நயக்கும் ஞான விநாயகனே! 4

Koviloor Digital Library

கருத இனிக்கும் கற்பகமே!
　　காலம் கடந்த சித்திரமே!
ஒருத னாக உலகாளும்
　　உவமை இல்லாத் தத்துவமே!
அருளே, அன்பர் புகலிடமே!
　　அடியேன் நின்பால் அடைக்கலமே!
உருவார் பிள்ளையார் பட்டி
　　ஒளிரும் ஞான விநாயகனே! 5

அருட்கவி. கு. செ இராமசாமி, எம். ஏ.,

நேரிசை வெண்பா

நாடுவார் நாடும் நலன்கள் அனைத்தும்கை
கூடுமா ருக்கும் குணசீலா, — ஈடில்லாக்
கற்பகமே, நீயே கதியென்று கூப்பிட்டேன்,
உற்றதுணை ஆவாய் உடன்.

நல்வாழ்த்துக்கள்

முத்து மீனா மெடிக்கல்ஸ்

தஞ்சாவூர்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கற்பகவிநாயகர் போற்றிப் பஃறொடை

அகர உயிரென அமர்ந்தனை போற்றி
ஆதியும் அந்தமும் ஆவாய் போற்றி
இன்பமே என்னுடை அன்பே போற்றி
ஈறும் முதலும் இல்லாய் போற்றி
உற்றவர்க் குதவும் உத்தம போற்றி

ஊர்பேர் இலாத ஒருவ போற்றி
எண்ணெழுத் தாக இலங்குவாய் போற்றி
ஏறுயர்த் தோன்தரும் எந்தால் போற்றி
ஐங்கரன் கொண்ட ஐயா போற்றி
ஒப்புயர் விகந்த உத்தம போற்றி

ஓங்கா ரத்தின் உருவே போற்றி
ஔவைக் கருளும் அண்ணா போற்றி
பஃறொடை விரும்பும் பரமா போற்றி
செக்கர் மேனிச் செல்வா போற்றி
கங்கை மைந்த கணபதி போற்றி

நச்சினார்க் கினிய நாயக போற்றி
குஞ்சர முகத்துக் கோவே போற்றி
அட்ட மங்கலம் அருள்வாய் போற்றி
நண்ணினர்க் கருளும் நாதா போற்றி
சத்தொடு சித்தெனச் சார்ந்தாய் போற்றி

Koviloor Digital Library

மந்திரப் பொருளென வயங்குவாய் போற்றி
துப்பெனு மேனிச் சுடரே போற்றி
அம்மையும் அப்பனும் ஆயினை போற்றி
மெய்யடி யாருளம் மேவுவாய் போற்றி
சர்ப்பா பரணம் தாங்குவாய் போற்றி

சொல்பொருள் ஆகத் துலங்குவாய் போற்றி
அவ்வுடன் உவ்மவ் ஆவாய் போற்றி
ஏழ்தலம் பரவும் இறைவா போற்றி
உள்ளுவார் உள்ளத் துறைவாய் போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி

என்னையும் ஆண்டருள் ஈசா போற்றி
கற்பக விநாயகக் கடவுள் போற்றி
காவிரி நதிதரும் கற்பகம் போற்றி
கிளிமொழி வல்லபை கேள்வ போற்றி
கீதம் இசைப்பவர் காதல போற்றி

குற்றம் பொறுத்தருள் கோவே போற்றி
கூரிய அங்குசம் கொண்டாய் போற்றி
கெடுமதி தாக்கா தடுபவ போற்றி
கேவலம் தொட்டுக் காவல போற்றி
கைகுவிப் போரைக் காப்பாய் போற்றி

கொங்கண முனிமனக் குறியே போற்றி
கோரக்கர் உவக்கும் கோவே போற்றி
கௌரிசேய் ஆகிய கண்ணே போற்றி
சகத்திர நாமச் சாமி போற்றி
சார்ந்தவர்ப் புரக்கும் தயாநிதி போற்றி

Koviloor Digital Library

சிந்துர மேனிச் செல்வா போற்றி
சீதரன் பரவும் சீல போற்றி
சுகபலை வெண்பூச் சூடுவாய் போற்றி
சூல பாணியின் தோன்றால் போற்றி
செல்வம் வழங்கும் திருவே போற்றி

சேவையை ஏற்றருள் செய்வாய் போற்றி
சைவர் வணங்குபெய்த் தெய்வம் போற்றி
சொற்றுணை வேதிய சுந்தர போற்றி
சோபனம் அருளும் சோதி போற்றி
சௌசம் வழங்கும் சங்கர போற்றி

ஞான பரனே நாயக போற்றி
ஞேயர் காணும் நீதி போற்றி
தத்துவம் கடந்த தனிமுதல் போற்றி
தானே தனக்குத்தலைவ போற்றி
திருகற் சிந்தையைத் திருத்துவாய் போற்றி

தீவினை தீர்க்கும் தேவே போற்றி
துதிக்கைக் கருளும் துதிக்கை போற்றி
தூய மேனிச் சுடரே போற்றி
தெய்வ நாயகத் திருவே போற்றி
தேவர்கள் பரவும் செல்வா போற்றி

தைரியம் வழங்கும் சயம்பு போற்றி
தொந்தம் தொலைத்தருள் தூயோய் போற்றி
தோன்றாத் துணையாம் ஆன்றோய் போற்றி
நன்மை வழங்கும் நாதா போற்றி
நாகக் கச்சு நயப்பாய் போற்றி

Koviloor Digital Library

நிகமா கமஞ்சொலும் நேயா போற்றி
நீதி நெறியருள் நித்தா போற்றி
நுண்ணியர் தேடும் அண்ணால் போற்றி
நூலறி வறியா மேலவ போற்றி
நெக்குறு வார்பால் புக்கவ போற்றி

நேயம் பூண்டோர் தாயக போற்றி
நைந்துளம் நெகிழ்வோர் நட்பே போற்றி
நொய்யதின் நொய்ய நுண்மை போற்றி
நோய்தீர்த் தாளும் தாயே போற்றி
பக்குவர்க் கருளும் முக்கணா போற்றி

பாதி மதியணி சோதி போற்றி
பின்பும் முன்பும் பேணுவை போற்றி
பீடுகொள் மூடிகம் நாடினை போற்றி
புலவர் நாவில் பொருந்துவாய் போற்றி
பூநா மகளிரைப் பொருத்துவாய் போற்றி

பெண்ணான் அலியென நண்ணுவாய் போற்றி
பேதைமை அகற்றும் நாதனே போற்றி
பைரவன் முன்வரும் பார்த்திபன் போற்றி
பொய்கடிந் தாருளம் பொருந்துவாய் போற்றி
போதகற் செற்ற போதகம் போற்றி

மின்னையொத் தொளிரும் மன்னவ போற்றி
மீகாம னாக விளங்குவை போற்றி
மருதங் குடிவளர் மாமணி போற்றி
மாதவர் சிந்தை வாழ்வாய் போற்றி
முன்னென் றில்லா முதல்வா போற்றி

Koviloor Digital Library

மூவா தொளிரும் மூர்த்தி போற்றி
மெய்யர் காணும் மெய்யே போற்றி
மேதினி தழைக்க விளங்குவாய் போற்றி
மைவிழிச் சித்தியின் மணாள போற்றி
மொய்குழற் புத்திசேர் மூர்த்தி போற்றி 100

மோதகம் தாங்கிய முன்னவ போற்றி
வளமெலாம் அருளும் வள்ளால் போற்றி
வாடா மலர்த்தாய் மைந்தா போற்றி
வியக்கும் திருவுரு மேவினை போற்றி
வீடுபே றளிக்கும் வித்தகா போற்றி 105

வெள்ளிமால் வரையை விரும்புவாய் போற்றி
வேதமும் காணா விமலா போற்றி
வையகம் காண வந்தாய் போற்றி

திருச்சிற்றம்பலம்.

– சிவ ஸ்ரீ தத்புருஷ தேசிகர்.

நல்வாழ்த்துக்கள்

இராமனுதன் ஸ்டோர்

காரைக்குடி.

Koviloor Digital Library

உ
சிவமயம்

விநாயக மணிமாலை

காப்பு

நவசக்தி ஓங்கும் விநாயகனைப் போற்றித்
தவமிருந்து பாமாலை பாடு — பவர்க்குப்
புவிவாழும் பேறு பதினாறும் பெற்று
தவறாது தந்தருள்வார் தான்.

பால விநாயகர்

பாலவி நாயகர்க்குப் பாஇசைத்துப் பாடுங்கள்
ஞாலமதில் முத்தமிழின் ஞானவரும் — காலத்தே
பாலமுதும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் படைத்திடுவீர் நன்று.

கற்பக விநாயகர்

கற்பகவி நாயகர்க்குக் கற்கண்டுப் பாஅமைக்க
அற்புதப்சேர் ஆறறிவை அள்ளியீவார் — சற்குருவின்
பொற்பாதம் சார்ந்தினிதே போற்றிவர சன்மார்க்கன்
கற்பகவி நாயகனைக் காண்.

வல்லபவ விநாயகர்

வல்லபவி நாயகனே வாழும் வகையெல்லாம்
நல்லவரம் ஈந்திடுவீர் நாள்தோறும் — செல்வமீந்து
கல்லாப் பிழையகலத் காலமெல்லாம் பேர்சிறக்க
வல்லமையே தந்திடுவார் வந்து.

மகா விநாயர்

மகாமாவி நாயகனை மாமணியைப் போற்றத்
தகாத வினைநீங்கும் தாழ்வு — அகலும்
சகாயன் மகாவி நாயகனை ஏற்ற
வகையான வாழ்வளிப்பார் வந்து.

Koviloor Digital Library

செல்வ விநாயயர்

செல்வவி நாயகர்க்குச் செங்கரும்புப் பாகுபெய்த
நல்லமுதாய் மோதகத்தை நாம்படைப்போம்—தொல்லுலகில்
ஒல்லும் வகையெல்லாம் ஓவாது செல்வமோங்க
பல்தொழிலும் முன்தருவார் பார்த்து.

வீர விநாயகர்

வீரசக்தி வேண்டி விநாயகனை நாம்பணிந்தால்
தீரமுடன் வீரமிகும் தீதகலும் — சீரோங்கும்
பூரணமாய்த் தாழ்வகன்று பூதலத்தில் வாழ்வோங்கும்
வீரமாவி நாயகன்பால் வேண்டு.

சித்தி புத்தி விநாயகர்

சித்திபுத்தி தந்தருளச் சிந்தையிலே வீற்றிருக்கும்
வித்தகவி நாயகரே வேண்டுகிறேன் — நித்தநித்தம்
முத்தமிழும் தித்திக்க முக்காலும் முன்விளங்க
சித்தமுடன் புத்தியீக சேர்த்து

நர்த்தன விநாயகர்

நர்த்தனம் ஆடும்வி நாயகனே நின்தந்தை
அர்த்தநாரி செங்காட்டில் அம்மையுடன் — பேர்பாதி
நர்ப்பதமாய் நாளுமுன் நர்த்தனத்தை காண்கின்றார்
அர்த்தமிகு நர்த்தனனே ஆடு.

சம்ப்ரதாய விநாயகர்

சம்ப்ரதாயப் பேரோங்கும் சம்பத்வி நாயகனே
நம்பியுன்னை நான்பணிந்தேன் நாள்தோறும்—அம்புவியில்
தும்பிக்கை யின்துணை கொண்டினிதே போற்றிவர
சம்பத்து வாழ்வோங்கும் சான்று.

- கவிஞர். சுப. நா. நாகப்பன்
கண்டவராயன்பட்டி.

Koviloor Digital Library

"கொற்றவா வணங்குகிறோம்"

நா. மீனவன்.

பணிபவர்க் கருளும் செய்ய
பரமனின் தலை யாகி
அணிபெற அறுகு சூடி
அடியவர்க் காக எங்கும்
மணிமுடி சூடி நிற்கும்
கற்பக மான வாழ்வே
பணிவதுன் தாளே யன்றிப்
பாரினில் வேறொன் றுண்டோ ! 1

கற்பகம் என்பார் உன்னைக்
கணபதி என்பார் நாளும்
அற்புதம் செய்து காக்கும்
அண்ணலே என்பார் கற்றோர்
பொற்புறும் அறிவே ! ஞானப்
புனிதனே ! என்பார் ஆகப்
பற்பல சொல்வார்க் கெல்லாம்
பழமென அருளைத் தந்தாய் ! 2

நாடெலாம் போற்று கின்ற
நகரத்தார் கோயில் தேடி
நாடினாய் நெடுநா ளாக
நல்லருள் புரிந்து காத்துக்

Koviloor Digital Library

கேடிலா வாழ்வும் செல்வக்
கிழமையும் எங்கள் பாலே
கூடுவான் வேண்டி ஆளும்
கொற்றவா வணங்கு கின்றோம் ! 3

சத்தியம் காக்கும் செல்வ
நங்கையர் சதுர்த்தி யன்று
பத்தியாய் விரதம் பூண்டு
பணிந்திட அருள்வாய் சொல்லும்
முத்தமிழ்ப் பாடல் கேட்டு
முன்னருள் சுரப்பாய் நெஞ்சில்
வைத்தவர்க் கென்றும் இன்பம்
வழங்குவாய் வாழ்த்து வாயே ! 4

வேதங்கள் துதிக்க நிற்கும்
வேழமே போற்றி ஞான
நாதனே போற்றி எங்கள்
நற்குடித் தலைவா போற்றி
போதமாய் நின்ற தெய்வப்
புனிதனே போற்றி கையில்
மோதகம் ஏந்தும் எங்கள்
மூலமே போற்றி போற்றி ! 5

*